வேலைக்காரி
மகள்
ராஜ்யம் பிக்சர்ஸ்
a BELL RELEASE

வேலைக்காரி மகள்

கதைச் சுருக்கம்

பெரும் பணக்காரரான பக்தவத்சல முதலியாருக்குக் குழந்தை இல்லை என்ற குறை. அதற்காக அவர் முதல் மனைவி பார்வதியிருக்கையிலேயே இரண்டாம் கல்யாணம் செய்து கொள்ள முயற்சிக்கிறார். பார்வதியின் சகோதரனான ராமலிங்கம் இந்த இரண்டாம் கல்யாணத்தை நிறுத்த ஒரு சூழ்ச்சி செய்கிறார். கல்யாணம் நிற்கிறது.

பார்வதியின் வேலைக்காரியான லட்சுமி கர்ப்பமாயிருக்கிறாள். அவளுக்குப் பிறந்த குழந்தை கமலா என்ற பெயரில் பார்வதியின் குழந்தையாக வளருகிறது. பார்வதியே தனது தாயார் என்று நினைக்கிறாள் கமலா.

இந்தக் குழந்தை—மாற்று ஏற்பாட்டிலே நடந்த சில சம்பவங்களால் லட்சுமியின்மேல் சந்தேகப்பட்ட அவள் கணவன் ஆறுமுகம், அவளை விட்டு விட்டு, துர்க்கி என்ற பெண்ணை மணம் செய்து கொள்கிறான். ஆனால் துர்க்கி ஒரு நாடகக் கம்பெனியுடன் ஓடிவிடவே மனம் வெறுத்த ஆறுமுகம் சந்நியாசியாகி ஊர் ஊராக அலைகிறான்.

இதற்கிடையில் பக்தவத்சலம் காலமாகி விடவே, அவரது பந்துக்கள் கமலா அவரது மகள் அல்ல என்று வாதாடுகின்றனர். ஆனால் லட்சுமியின் சாமர்த்தியத்தால் வழக்கு தோற்றுப் போகிறது.

ஊர்சுற்றி வரும்போது, தன் இரண்டாம்தாரம் துர்க்கியை அலங்கோலமாகச் சந்தித்த ஆறுமுகம் அவளைக் கொல்லப் போகிறான். ஆனால் ஏற்கனவே கொலை செய்யப்பட்டுக்கிடந்த அவளைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கூண்டிலேற்றப்படுகிறான் ஆறுமுகம்.

சுப்பய்யா என்ற வக்கீல் ஆறுமுகத்துக்காக வாதாடி, அவனை விடுவிக்கிறார். சுப்பய்யா வேறு யாருமில்லை, ஆறுமுகத்துக்கு லட்சுமியிடம் பிறந்த மூத்த குழந்தை சுப்பன்தான் இந்த வக்கீல் சுப்பய்யா. இது தெரியாமல் சுப்பய்யா வீட்டில் வேலை செய்கிறான் ஆறுமுகம்.

ராமலிங்கத்தின் மகனான ப்ரேம்நாத்தைக் காதலிக்கிறாள் கமலா. லட்சுமியும் இவர்களுக்கு மணமுடிக்கத் துடிக்கிறாள். ஆனால் ப்ரேம்நாத்தின் தாயார் தேவகி இதற்கு ஒப்பவில்லை. காரசாரமான விவாதத்தில் தேவகி கீழே விழுகிறாள். கோபங் கொண்ட கமலா லட்சுமியை அடிக்கிறாள். மனம் நொந்த லட்சுமி மகன் சுப்பய்யா வீட்டிற்குச் சென்று விடுகிறாள்.

கமலாவுக்கு உண்மை தெரிகிறது. வேலைக்காரியான லட்சுமிதான் தனது தாயார் என அறிந்து சுப்பய்யாவின் வீட்டிற்கு ஓடிச் சென்று லட்சுமியின் காலில் விழுகிறாள். ஆறுமுகத்துக்கும் உண்மை தெரிகிறது. பிரிந்தவர் ஒன்று சேருகின்றனர்.

ப்ரேம்நாத்தை மணந்த கமலா பேரானந்தமாக வாழ்கிறாள். லட்சுமியின் மனமும் ஆனந்தமடைகிறது.

சுபம்

பாட்டுக்கள்

1

லட்சுமி—ஆறுமுகம்

ஆறு: பகலெல்லாம் வேலை செய்தே
பொழுதோடே வந்தேனே—
சாப்பாட்டுக்கு சமையல்—ஏதும்
செய்தாயா நீ—
லட்சுமி: பொழுதெல்லாம் வண்டியை ஓட்டி
தொரை போல வந்தாயே
பூவாவுக்கு ரேஷன் வாங்கி
வரவேணுமா?—
ஆறு: மனமெல்லாம் உன் மேல் வைத்தே
மறந்தேனே ரேஷன் வாங்க
லட்சுமி: நிஜமானல் சாப்பாடேன் நான்
இருக்கும் போது—என்
நினைவே போதும்
அடிமை வேலை செய்தாலும்
குடிசைக்குள் குடி இருந்தாலும்
அன்பால் மனம் ஒன்றிய வாழ்வே
இன்புறும் வாழ்வு—
லட்சுமி: ஓ.........
வண்டியை ஓட்டாதே—உன்
அப்பா போலே
ஆறு: ஓ.........
வாசலைக் கூட்டாதே—உன்
அம்மா போலே—
லட்சுமி: வண்டிக்காரன் மகனானாலும்
வக்கீலாகணும்
ஆறு: வண்டிக்காரன் மகனானாலும்
வக்கீலாகணும்
மிக நல்லவன் என்னும் பேரும்
மேலான புகழும் சீரும்
மகராசன் போலே செல்வம்
யாவையும் சேர்ப்பாய்—எங்கள்
ஆசையைத் தீர்ப்பாய்—
லட்சுமி: ஓ.........
பெரியவனானல் என்னை நீ மறந்திடாதே—
ஆறு: ஓ.........
பேரும் பணமும் வந்தால் குணம் மாறிடாதே
லட்சுமி: எளிமையாக வாழ்ந்தது என்றும்
நினைவில் வரவேணும்—

ஆறு: இனிதாகும் மனையாள் நீயே
திரு வாழும் மனையும் இதுவே
இருவரும்: இணையில்லா நமது செல்வம் யாவும் இவனே (அடிமை)

2

ஆறுமுகம்

1. ஜல்தி சலோ ஹை ஜோராய் ராஜா
சவாரி போதும் ஜல்தி சலோ!
சாயங்காலம் ஆச்சுது பொழுது
சாப்பிடுவோம் ஜல்தி சலோ!
2. கொள்ளும் பில்லும் வாங்கோணும்
கோதுமை ரேஷன் வாங்கோணும்
நல்ல சவாரி பாத்தது போதும்
ஜில்லுனு வீட்டுக்கு ஜல்தி சலோ!
3. வண்டியில் பல பேர் வருவாங்க
மறைவாக ரகஸியம் பேசிடுவாங்க
நீ கண்டது கேட்டது எதுவானாலும்
கப்சிப் வெளியே சொல்லாதே
4. நல்லவன் கெட்டவன் யாரானாலும்
சல்லியைக் கொடுத்தா ஏத்திக்குவோம்
உள்ளது போல தராது போனா
உடனே ஒரு கை பாத்துக்குவோம்.

3

[illegible]ரஸ்

புதுமை இந்நாளே—புகழ் திருநாளே
அனைவரும் வாருங்கள்—எங்கள்
அரசியைப் பாருங்கள்
ஆனந்தமுடன் சீர்வாய்ந்திடவே—நல்
ஆசியைத் தாருங்கள் (புதுமை)
ஆசையின் வடிவாகப் பிறந்த
அழகிய ஜோதி—
ஜான்ஸி ராணியைப் போலே—புவிமேலே
புகழ்பெறவேணும்
ஆனந்தமுடன் சீர்வாய்ந்திடவே—நல்
ஆசியைத் தாருங்கள் (புதுமை)
வீரம் திகழ் அல்லியைப் போலே
விண்ணோர் புகழ் கண்ணகி போலே
பாரோர் பணியும்—மணிமேகலை போலே
மேன்மையினாலே
ஆனந்தமுடன் சீர்வாய்ந்திடவே—நல்
ஆசியைத் தாருங்கள் (புதுமை)
பண்ணின் மணம் வீசும்—எங்கள்
பாரததேசம்—உயர்
பாங்குடன் ஈன்ற கஸ்தூரி காந்தியைப் போலே
ஆனந்தமுடன் சீர்வாய்ந்திடவே—நல்
ஆசியைத் தாருங்கள்.

லட்சுமி

ஆசி தந்த பேர்கள் அநேகம் சொன்னபோதும்
நேசம் கொண்டதாயின் ஆசை கேளம்மா
என்னாளும் ஏழைமீதில் இனிதாகும் அன்பினால்
எல்லோரும் போற்ற வாழ்வாய் இதே என் ஆசையே
ஆனந்தமுடன் சீர்வாய்ந்திடவே—நல்
ஆசியைத் தாருங்கள் (புதுமை)

4

லட்சுமி

அன்பே எந்தன் ஆருயிரே அமுதே அழாதே
கண்கள் நீரைச் சிந்தவே உனே யார் வைதாரோ?...
நிழல்போலும் உன்னையே பிரியாத அன்னையை
கனிவாயால் நீதான் அம்மா எனவே சொல்லாயோ (அன்பே)

நீயே என்னுடல் ஆவியெல்லாம் நிலையாகும் இன்பமே
நிகரில்லா செல்வர்போலே நீ அன்பு மாறினும்
மாறாது தாயின் உள்ளம் வாழ்வில் என்னாளுமே
மணிவாயால் என்னை அம்மா எனவே சொல்லாயோ
(அன்பே)

நெஞ்சில் எண்ணும் எண்ணமெல்லாம்
நெடுமூச்சாய் மாறியே
துயர்மேவும் ஏழை நானே
உனக்காக வாழ்கிறேன்
உனையன்றி வேறு யாரும்
துணையில்லா என்னையே
கனிவாயால் நீதான் அம்மா
எனவே சொல்லாயோ! (அன்பே)

5

லட்சுமி

முடிந்ததே—என் வாழ்வு இன்றே
படி மீது பெற்ற மகனுக்கும்
பகிக்கும் பாரமாய்
பகையான பாவி என் வாழ்வு (முடி)

மாறாத சோக வாழ்வுதான் ஏனோ இப்பாரிலே
தீராத விதியின் செயலால் என் ஆசை
தீராது பாழாக லாச்சே (முடி)

மணவாளன் அன்பிழந்தேனே
மாபாவியாகினேனே
துணையாரும் வாழ்வில் காணேன்
துயரும் கண்ணீரும் ஆனேன்
சுகமே இல்லாத பேதை
எனையேற்றுக் கொள்—நீ சாவே (முடி)

6

படகுப் பாட்டு

காத்தருளவேணுமடா கடவுளே—ஐலஸா
உனைக்கைகுவித்தே பாய் விரித்தோம்—கடவுளே ஐலஸா
கவலை யில்லாமலே—கஷ்டப்படாமலே
காசுபணம் சேர்க்கவே வகையறியாத எமைக் (காத்தருள)
அலைகள் மோதவே—ஆடுது ஓடமே
அபாயமில்லாமே அனைவரும் கரைசேரக் (காத்தருள)

வேடிக்கையாகவே பாடுவோம்
வித விதமாகவே ஆடுவோம்
நதியின் மீதிலே படகின் வேகமே
அழகுதானிதோ பார்
கேளிக்கையேது நம் வாழ்விலே
எந்தநாளும் உழைப்புத்தான் பாரிலே
எந்நாளும் நீரிலே
வாழும் மீன்கள்போல்
நாமும் வாழ்வதாலே
கொடியமின்னல் இடியுடனே குமுறுதடா ஐலஸா
கொடிமரமும் பாய்மரமும் குலையுதடா ஐலஸா
அடிவானம் கருத்துமேகம் அலட்டுதடா ஐலஸா
அண்டமெல்லாம் நடுங்கப்புயல் அடிக்குதடா ஐலஸா

7

நாடக மேடைப் பாட்டு

மனைவி : அத்தை வீடு சுகமில்லை—என்
அருமை மாமன் தயவில்லை
பெத்தவ முன்னாலே மாமன்
பேசவும் பயப் படறான்
என்னாங்க ? உங்களைத்தான்
எங்கேதான் இருக்கீங்க?
இட்டிலி தான் சுட்டிருக்கேன்
இதையே தின்னுங்க.

தாய் : இட்டிலி வேண்டாம் உடம்புக்கு நோவு—
உன் உடம்புக்கு நோவு
இடியாப்பம் சாப்பிடலாம்
வாடா என் மகனே.

மகன் : ஆசைக் கண்ணு பேச்சைக் கேட்டா
அம்மாவுக்கு கோபம்
அம்மா பேச்சை கேக்க நின்னா
அவ மனசு வேகும்
ஆட்டி வைக்கிறாங்க—என்னை
அதட்டி மெரட்டறாங்க
அம்மாவா !— ஐயையோ
பொண்டாட்டி அப்பப்பா !

அவ வேண்டாம் இவ வேண்டாம்
ஐயோ யாரும் வேண்டாம்

தாய்: ஆளை மயக்கப் பாக்கரு
அதை வாங்கித் தின்னாதே

மனைவி: அம்மா பேச்சைக் கேக்காதே
அவளைக் கண்டு நடுங்காதே.

தாய்: எம் மகண்டி! போடி வெளியே!
மனைவி: எம்புருசன்! ஏண்டி கத்தரே!

தாய்: எம் மகண்டி!
மனைவி: எம்புருசன்டி!

தாய்: எம் மகண்டி!
மனைவி: எம் புருசன்டி!

மகன்: சண்டை போட லாகுமா?—வீண்
சச்சரவும் ஏனம்மா!
தின்னும்போது வம்பு செய்து
தினமும் பட்டினி போடாதே.

மனைவி: கைச்சிலவு தருவேனே
காசிக்குப் போயேன்—நீ
காசிக்குப் போயேன்.

தாய்: அம்மா பேச்சு வெறுப்பாச்சு
அதிகாரம் மாறிப் போச்சு
மருமக எனை வெறட்டரு—என்
மகனை மறக்க முடியலே!

மனைவி: மூட்டை இந்தா!—நீட்டு கம்பி
காசிக்கு யாத்திரை போவாய்
காசிக்கு யாத்திரை போவாய்

தாய்: மகனுக் கொரு மகன் பிறந்து
மணி போலே வளக்கணும்
மகராசி மருமகளே
மன மிரங்க வேணுமே.

மனைவி: அத்தையே இந்தா—உன்
அருமைப் பேரன் பார்
இப்பொழுதாகிலும் தயவாய் போவாய்
காசி யாத்திரை தான்.

தாய்: என் பேரன் ஆட்ட மெல்லாம்
கண்ணாலே நான் கண்டு போறேன்
மறுபடியும் நான் வர மாட்டேன்
மருமகளே தயை செய்வாய்.

மனைவி: பேரனையும் பாத்தாச்சு
பேராசை தீ ரல்லையா?
காசிக்குப் போகச் சொன்னா
கல்லாக நிக்காதே!

தாய்: இந்நாள் இருந்தேன் இன்னும்
கொஞ்சநாள் பொறுத் துக்க
என் பேரன் கல்யாணத்தை
பாத்துட்டு நான் போகறேன்.

மனைவி: எண்ணம் போலே செய் தேனே
உன் பேரன் கல்யாணம்
ஒண்ணும் நீ பேசாதே
உடனே செல்வாயே.

தாய்: அத்தை யானே மருமகளே
அதிகாரம் இனி செல்லாதே
கலந்து செல்வோம் நீயும் நானும்
காசி ராமேஸ் வரமே!

தாய்: நீயும் வாடி நாம் போவோம்!

மனைவி: நீ போடி நாமாட்டேன்

தாய்: நீ யில்லாமே நா மாட்டேன்.

மகன்: ஆட்டி வைக்கும் மருமகளும்
அத்தையாவாள் ஒரு நாளில்
அத்தை கூட அந்த நாளில்
அருமை மரு மகள் தானே
அத்தை மரு மகள் மத்தியில்
அதிகாரம் எல்லாம் ஏனோ?
அன்பு கொண்டே கௌரவித்தால்
அதுவே பர மானந்தம்
ஆனந்தம் ஆனந்தம்
அதுவே பேரானந்தம்.

8

கமலா

மது—நிறையும் புரிய நறுமணம்—தனைப்
பொழியும் அழகு மலரினம்—அதில்
வண்டாடும் காட்சி தனையே கண்டு
மகிழ்ந்தேன் என் மனம் (மது)

மாலை மனோகர மாருதம் வீசும் வசந்தகாலமே
நிறை—வாலிப வயதின் கனவே போல மாலை வானமே
மாறும் கோலமிதே—மாயா ஜாலமே— (மது)

மாசில்லாத வாழ்வினில் இனிதாய்—
மாறா இன்பமே
மாலாகும் செல்வ போகம்—இங்கு
யாவும் சொந்தமே
மனோரதம் போலே—நானுமே
சோபிதமாக வாழ்வேன்
யாரெனக்கே நிகராய் பாரில் எங்குமே (மது)

வானம்பாடி போலென் மனமே கானம் பாடுதே
இது வரையில் என்றும் அறியா இன்பம் எதையோ நாடுதே
சதாவும் நீல வானிலே தாவிடும் பறவை போலே
சார்ந்திடும் யௌவனமே தரும் ஆனந்தமே (மது)

9

கமலா

தளுக்கு குலுக்கு நடை
மினுக்குது மின்னல் இடை
சுட்டும் கரிய விழிச் சுடரைப் பாராய் நீ
சுந்தரி எந்தன் அழகைப் பாராய் நீ
சோபை மிகும் முகத்தைப் பாராய் நீ
முல்லை இதழ் முறுவல் பாராய் நீ
தோகைபோல் ஆடுவேன் பாடுவேன் ஆஹா! (தளுக்கு)

வானில் வெண்மதி போலே
குதூகலமாக
பிரகாசமுடன்
வீணையின் இசைதரும்—சுவைபோல்
பொங்கி யெழும் சிந்தனையின்
புதுமைக்கவி அமுதம் போலே
வசீகரமாக நானும் திகழ்வேன்.

10

அருணாஜலமும் பரதேசிகளும்

அம்பலத்தரசே அருமருந்தே—நாம்
உண்பது எல்லாம் ஊர் விருந்தே
சாவடி சத்ரம் நம்சொந்தம்—அன்னக்
காவடிக்கேது நிர்ப்பந்தம். (அம்)

கன்ட்ரோல் ரேஷன் நமக்கேது—சோத்து
கவலை என்பது கிடையாது
பெண்டாட்டி பிள்ளை பெரும் விலங்கு
தெரியக் கொண்டாடும் மனக்குரங்கு (அம்)

பதவியில் ஆசை பணத்தில் ஆசை
எதிலும் ஆசை கொள்வது மடமை
பாரில் உள்ள பொருள்களெல்லாம்
பரதேசிக்கே பொது உடமை (அம்)

மழைபொழிய வருண ஜபம் செய்வோம்—நல்ல
பயிர் விளைய தினமும் தவம் செய்வோம்
உழைத்து வழக்கமில்லை உணவு கிடைக்காவிடில்
உண்மை சத்யாக்ரஹம் செய்வோம். (அம்)

ராமநாத் பிரஸ், சென்னை-14

வேலைக்காரி மகள்

தயாரிப்பாளர் ...	ஸ்ரீமதி ஸி. லக்ஷ்மிராஜ்யம்
டைரெக்ஷன் ...	ஸீ. வி. ரங்கநாததாஸ், பி. ஏ.
மேற்பார்வை ...	ப்ரஸாத்
தமிழ் அஸோஸியேட் ...	கே. தேவநாராயணன்
கதை ...	ஸி. லக்ஷ்மிராஜ்யம்
வசனம் ...	"இளங்கோவன்"
பாடல்கள் ...	கே. டி. சந்தானம், கே. தேவநாராயணன்
ஒளிப்பதிவு ..	ரஹ்மான், என். ஸி. பாலகிருஷ்ணன், மாரி
பாடல்கள் ஒலிப்பதிவு, ரீரிக்கார்டிங் ...	டி. எஸ். ரங்கசாமி
ஒலிப்பதிவு ...	ஏபிள் ஜீவா, கிருஷ்ணமூர்த்தி, சூர்யநாராயணா
ஆர்ட் ...	டி. வி. எஸ். சர்மா
ஸெட்டிங்ஸ் ...	கோவிந்தஸாமி
சங்கீதம் ...	(லேட்) ஸி. ஆர். சுப்பராமன், எஸ். தக்ஷிணாமூர்த்தி
நடனம் ...	வெம்பட்டி ஸத்யம்
மேக்-அப் ...	ஹரிபாபு, நாகேஸ்வரராவ், ஸ்ரீநிவாஸன்
பிரதம நிர்வாகி ...	ஸி. வி. கிருஷ்ணமூர்த்தி
புரொடக்ஷன் மானேஜர் ...	ஏ. வி. கிருஷ்ணமூர்த்தி
ஸ்டில்ஸ் ..	நாகராஜராவ்
எடிடிங் ..	மாணிக்கம், ரமணி

உதவியாளர்கள் :

(டைரெக்ஷன்) ஜே. கிருஷ்ணசாமி, எஸ். என். பாலசந்தர்.
(எடிட்டிங்) கே. சுப்ரமண்யம், ஹரி.

பின்னணி சங்கீதம் :

எம். எல். வஸந்தகுமாரி, லீலா, கோமளா,
நாகேஸ்வர ராவ், எஸ். தக்ஷிணாமூர்த்தி, தேவநாராயணன்.

ஸ்டூடியோ :

ரேவதி & சோபனாசலா

உரிமையாளர் :

பெல் பிக்சர்ஸ் (மதராஸ்) லிட், மதராஸ்-14